11th March 1961]

(*b*) The Honorary Assistant Medical Officer, Tuberculosis Department, Erskine Hospital, Madurai, applied for appointment as Honorary Lecturer in Tuberculosis in the Madurai Medical College. This offer could not be accepted as the sanctioned post of Lecturer in Tuberculosis in the college is expected to be filled up shortly and as there is no post of Honorary Lecturer in Tuberculosis in the College.

Power supply

* 762 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கேரள ராஜ்யத்திற்கு நம் மாநில சர்க்கார் 8,200 கிலோ வாட் மின்சாரம் நீடித்து சப்ளை செய்ய சம்மதித்திருக்கிறதா ?

(இ) அப்படியானல், எத்தனை ஆண்டுகளுக்கு இது நீடிக்கும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir, but the actual supply that is being given at present is 9,896 K.W.

(*b*) The present rate of supply of 9,896 K.W. will be continued fora period of ten years from the 1st November 1956, unless the Kerala Government discontinue taking such supply earlier.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த ஏற்பாடு எதற்காகச் செய்யப்பட்டது ? இப்பொழுதுள்ள ஏற்பாட்டைக் காட்டிலும், 8,000 சொச்சம் கிலோ வாட்டுக்குப் பதில் 9,000 கிலோ வாட்டுகள் கொடுக்கும் அவசியம் என்ன ? இதன் மூலமாக நம்முடைய மாகாணத்திற்கு ஏற்பட்டிருக்கும் அனுகூலம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : மாகாண சீரமைப்பின் போது, கேரள ராஜ்யத்திற்கு நம் ராஜ்யத்திலிருந்து மலபார் ஜில்லாவிற்குத் தேவையான மின்சார சக்தி கொடுக்க வேண்டுமென்று கேரள அரசாங்கம் அன்றைக்கு நம் அரசாங்கத்துடன் விவாதம் நடத்தி மின்சக்தி வேண்டுமென்று கேட்டார்கள் ; நாம் அடுத்து வரும் 10 வருஷங்களில் வருஷத்திற்கு 10,000 கிலோ வாட் வீதம் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதன்பிரகாரம் இது கொடுக்கப் படுகிறது.

SRI M. KALYANASUNDARAM : நம் ராஜ்யத்தில் எந்தப் பகுதிக்காவது கேரள ராஜ்யத்திலிருந்து மின்சாரம் பெறப் படுகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : கேரள ராஜ்யமும் நம் மாகாணத்திற்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனல், அது கொஞ்சம்.